©

**தமிழ்நாடு அரசு**
**2019**

**கையெழுத்துத் தொடர்**

# நிதி (படிகள்)த் துறை

**அரசாணை எண்.35, நாள்: 29-01-2019**

*(விளம்பி, தை-15, திருவள்ளுவர் ஆண்டு 2050)*


**<u>சுருக்கம்</u>**

படிகள் - 2018-2019 சட்டமன்றப் பேரவையில் துறை சார்ந்த மானியக் கோரிக்கை விவாதத்தின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பு - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கு நீள்பணி சிறப்பூதியம் உயர்த்தி வழங்குதல் (Revision of Long Service Special Pay to the personnel working in Fire and Rescue Services) - ஆணை - வெளியிடப்படுகிறது.


---

**பின்வருவனவற்றைப் படிக்கவும்:–**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநரின் கடிதம் எண்.16379/ஆ1/2018, நாள் 11.09.2018 மற்றும் 17.10.2018.

-o0o-

**<u>ஆணை:-</u>**

சட்டமன்றப் பேரவையில் 26.06.2018 அன்று நடைபெற்ற 2018-2019-ஆம் நிதியாண்டிற்கான காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கான மானியக் கோரிக்கை விவாதத்தின் பதிலுரையின் போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:- (அறிவிப்பு எண்.78)

> **“தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில், 10 வருடம், 15 வருடம் மற்றும் 20 வருடம் எவ்வித தண்டனையும் இன்றி பணியாற்றும் பணியாளர்களுக்கு ரூபாய் 5, 8 மற்றும் 10 என வழங்கப்பட்டு வரும் நீள்பணி சிறப்பூதியம் முறையே ரூபாய் 100, 160 மற்றும் 200 என உயர்த்தி வழங்கப்படும். இதன் தொடர் செலவினம் 42 இலட்சம் ரூபாய் ஆகும். இத்திட்டத்தின் மூலம் 2155 பணியாளர்கள் பயனடைவர்”.**

**2.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில், மேலே பார்வையில் படிக்கப்பட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநரின் செயற்குறிப்பினை ஏற்று, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில், நிலைய அலுவலர் (Station Officer) பதவிக்கு கீழுள்ள சீருடைப் பதவியில் தண்டனை ஏதுமின்றி பணி முடிக்கும் பணியாளர்களான (a) முன்னணித் தீயணைப்போர் (Leading Fireman), (b) இயந்திர கம்மியர் ஓட்டுநர் (Driver Mechanic), (c) தீயணைப்போர் ஓட்டுநர் (Fireman Driver) மற்றும்

(d) தீயணைப்போர் (Fireman) ஆகியோர்கள், முறையே 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் மற்றும் 20 ஆண்டுகள் பணிமுடித்த மாதத்திலிருந்து அவர்களுக்கு நீள்பணி சிறப்பூதியம் (Long Service Special Pay) கீழ்கண்டவாறு நவம்பர் 2018 முதல் உயர்த்தி வழங்கிட அரசு ஆணையிடுகிறது. இதனால், ஆண்டொன்றிற்கு ரூ.42.53 இலட்சம் தொடர் செலவினம் ஏற்படும். 2018-2019-ஆம் நிதியாண்டிற்கு ரூ.14.18 இலட்சம் (பதினான்கு இலட்சத்து பதினெட்டு ஆயிரம் மட்டும்) ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

| வ. எண். | பணிமுடித்த ஆண்டுகள் (Completed Years of Service) | தற்போதைய நீள்பணி சிறப்பூதியம் (Existing Long Service Special Pay) | உயர்த்தப்படும் நீள்பணி சிறப்பூதியம் (Enhanced Long Service Special Pay) |
|---|---|---|---|
| 1. | 10 ஆண்டுகள் | ரூ.5 | ரூ.100 |
| 2. | 15 ஆண்டுகள் | ரூ.8 | ரூ.160 |
| 3. | 20 ஆண்டுகள் | ரூ.10 | ரூ.200 |

**3.** மேலே பத்தி 2-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் உரிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று மேற்கொள்ளப்பட வேண்டும்.

"2070 00 ஏனைய நிருவாகப் பணிகள் – 108 தீத்தடுப்பும் கட்டுப்பாடும் - AB தீத்தடுப்பும் கட்டுப்பாடும் – பட்டறைகள், நடமாடும் செப்பனிடு பிரிவுகள் உட்பட தீயணைப்பு நிலையங்கள் – 01 சம்பளங்கள் (த.தொ.கு.2070 00 108 AB 0100)".

**4.** மேலே பத்தி 2-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புது துணைப்பணி" (New Instrument of Service) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி(வரவு-செலவு-I)த் துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963-ல் உள்ள அட்டவணை "A" படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதி(வரவு-செலவு-I)த் துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2018-2019-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி(வரவு-செலவு-I)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**5.** இவ்வாணை கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.2534 (இரண்டாயிரத்து ஐந்நூற்று முப்பத்து நான்கு) உடன் பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

க.சண்முகம்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, சென்னை-600 018.
உள் (காவல்-17) துறை, சென்னை-600 009.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை-18.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை-18 (பெயரில்).
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை-I), சென்னை-18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை-I), சென்னை-18 (பெயரில்).
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை-II), சென்னை-18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை-II), சென்னை-18 (பெயரில்).
மாநில கணக்குத் துறைத் தலைவர் (உதபி), சென்னை-9 / மதுரை.
முதன்மைச் செயலாளர் / ஆணையர், கருவூலக் கணக்குகள் துறை, சென்னை-35.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (கிழக்கு), சென்னை-5.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (தலைமைச் செயலகம்), சென்னை-9.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (தெற்கு), சென்னை-35.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (வடக்கு), சென்னை-79.
அனைத்து சம்பளக் கணக்குகள் அலுவலர்கள்.
அனைத்து கருவூல அலுவலகங்கள்.
அனைத்துத் துணைக் கருவூல அலுவலகங்கள்.
நகல்:-
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
அரசு கூடுதல் தலைமைச் செயலரின் தனிச் செயலர், உள்(காவல்-17)த் துறை.

**-/ ஆணைப்படி : அனுப்பப்படுகிறது /-**

பிரிவு அலுவலர்.